सत्यमेव जयते

India : The Emerging Defence Manufacturing Hub
DEFEXPO 18 INDIA
11-14 APRIL 2018 CHENNAI
Ministry of Defence

Defence Exhibition Organisation
Ministry of Defence
Government of India

**பத்திரிகை தகவல் அலுவலகம்**
**இந்திய அரசு**
**சென்னை**
******************

## சென்னை பாதுகாப்பு கண்காட்சி 2018 பெரிய அளவு ஆர்வம்

சென்னை, மார்ச் 1, 2018

கடந்த பத்தாண்டுகளில் பாதுகாப்பு கண்காட்சி இந்தியா என்ற நிகழ்ச்சி அதன் வகையில் உலகின் மிகப்பெரிய நிகழ்ச்சிகளில் ஒன்றாக ஆகி உள்ளது. முதல் முறையாக பாதுகாப்பு கண்காட்சி சென்னையில் 2018 ஏப்ரல் 11ஆம் தேதி முதல் 14ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது. இந்த கண்காட்சி பெரிய அளவில் ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளது. காஞ்சிபுரம் மாவட்டம் திருவிடந்தல் என்ற இடத்தில் சென்னைக்கு அருகே கிழக்கு கடற்கரையில் இந்த கண்காட்சி ஏற்பாடு செய்யப்படவுள்ளது. 2018 பாதுகாப்பு கண்காட்சி தேதி அறிவிக்கப்பட்ட மிக குறுகிய காலத்திலேயே அதில் பங்கேற்பதற்காக வெளிநாடுகள் மற்றும் உள்நாட்டு பாதுகாப்பு தொழிற்சாலைகள் பெரிய அளவில் ஆர்வம் தெரிவித்துள்ளன. இதுவரை 42 நாடுகள் இதில் பங்கேற்பதற்கு உறுதி தெரிவித்துள்ள நிலையில், வரும் நாட்களில் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பாதுகாப்பு உற்பத்தியில் பெரிய அளவில் ஈடுபட்டுள்ள அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா, பிரான்ஸ், இஸ்ரேல், கொரியா, ஸ்வீடன் உள்ளிட்ட நாடுகள் பங்கேற்பதை உறுதி செய்துள்ள நாடுகளில் சில. பாதுகாப்பு கண்காட்சியில் பங்கேற்கும் குழுக்களில் பல அமைச்சர்கள் மட்டத்திலான நிலை குழுக்களாகும் என்பது குறிப்பிடத்தக்கது. பாதுகாப்பு கண்காட்சி 2018-ல் ராணுவம், கப்பற்படை, விமானப்படை ஆகியவற்றைச் சேர்ந்த உயர் அதிகாரிகளும் பங்கேற்கின்றனர்.

இந்தியாவை உலகின் முக்கிய பாதுகாப்பு உற்பத்தி மையமாக காட்சிப்படுத்துவதே பாதுகாப்பு கண்காட்சி 2018-ன் முக்கிய நோக்கமாகும். இந்த கண்காட்சி உள்நாட்டு தொழிற்சாலைகள் தங்களது உள்நாட்டு உற்பத்தி தளவாடங்களையும், பகுதிப்பொருட்களையும் காட்சிக்கு வைப்பதற்கு மிகுந்த ஆர்வம் தெரிவித்துள்ளன. தினமும் சுமார் பத்து நிறுவனங்கள் என்ற வீதத்தில் பாதுகாப்பு கண்காட்சி அரங்கமைக்க இடம் கோரி வருகின்றன. பாதுகாப்பு கண்காட்சி 2018 சுமார் 2 லட்சம் சதுர மீட்டர் பரப்பில் அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.